# மதுரை மாநகராட்சி

## 47வது மாமன்ற கூட்டத்தின் தீர்மானங்கள்

## 14.07.2026ம் தேதி நேரம்: காலை: 10.30 மணி

**1. அ1/007094/2026**

அரசாணை (Rt) எண்: 1889 பொது (சிறப்பு- அ) துறை நாள்:30.05.2026-ன்படி இணை இயக்குநர் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் பணிபுரிந்து வந்த திரு.கௌரவ் குமார்.இ.ஆ.ப, பணிமாறுதலில் மதுரை மாநகராட்சி ஆணையாளராக பணியமர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. அன்னார் 02.06.2026 பிற்பகல் முதல் மதுரை மாநகராட்சியின் ஆணையாளராக பணியேற்பு செய்துள்ள விபரத்தினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1405**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2. அ2/008107/2026**

அரசாணை (Rt) எண்.127 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME.3.1) துறை நாள்.05.06.2026-ன்படி தஞ்சாவூர் மாநகராட்சியிலிருந்து பணிமாறுதலில் திரு.S.முரளி, நகரதிட்டமிடுநர், மதுரை மாநகராட்சியில் 11.06.2026 முற்பகல் முதல் நகரதிட்டமிடுநராக பணியேற்பு செய்துள்ள விபரத்தினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1406**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3. F10(B26)/6035/2001**

மதுரை மாநகராட்சியில் பணிஓய்வு பெற்ற பணியாளர்கள்/ பணிக்காலத்தில் காலஞ்சென்ற பணியாளர்களுக்கும் 2008-2009 ஆண்டு வரை சேமநலநிதி வட்டித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது மதுரை மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கும், பணி ஓய்வு பெற்றவர்கள்/பணிக்காலத்தில் காலஞ்சென்ற பணியாளர்களுக்கும் 2009-2010 முதல் 2013-2014 வரை சேமநலநிதி வட்டித் தொகை கணக்கிடப்பட்டுள்ளது.

சேமநலநிதி வட்டித் தொகை கணக்கீட்டுத்தாள் தயார் செய்யப்பட்டுள்ளதை, அகத்தணிக்கை செய்து தணிக்கைச்சான்று வழங்க கோரி துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் பணிஓய்வு பெற்றவர்களும்/ பணிக்காலத்தில் காலஞ்சென்ற பணியாளர்களும் தாங்கள் பணிபுரிந்த காலம் வரை சேமநலநிதி வட்டித் தொகை வழங்கக்

கோரி ஓய்வூதியர்களிடமிருந்து ஓய்வூதியதாரர்கள் சங்கத்தின் மூலமாகவும் தொடர்ந்து கோரிக்கை மனுக்கள் வந்தவண்ணம் உள்ளது.

அதன்பொருட்டு நிர்வாக நலன் மற்றும் பணியாளர் நலன்கருதி 2014-2015 முதல் நடப்பாண்டு வரை சேமநலநிதி வட்டித்தொகை கணக்கீடு செய்யும் பணிக்காக, அரசு கருவூலம் மற்றும் கணக்குத்துறையில் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர்களும், இப்பணியில் முன்அனுபவமிக்கவர்களுமான ஐந்து அலுவலர்கள் கொண்ட குழு அமைத்து இப்பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

குறிப்பு: ஏற்கனவே 2009-10 முதல் 2013-14- ஆண்டுக்கு சேமநலநிதி அச்சடிக்கப்பட்டதில் செலவினம் ரூ.4,37,160/- (9+9% GST உட்பட)

தற்போது 2014-15 முதல் 2025-26ம் ஆண்டு வரை சேமநலநிதி வட்டி கணக்கீட்டுக்கான உத்தேச செலவினம் ரூ.11,00,000/- (ரூபாய் பதினோறு இலட்சம் மட்டும்)

**மாமன்ற தீர்மானம் எண்: 1407**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4. <u>H7/E7/015227/2024</u>**

மதுரை மாநகராட்சியில் உள்ள 100 வார்டுகளில் 25 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஒரு பிரிவிற்கு ஒரு பணியாளர்கள் என 25 கணினி உதவியாளர் மற்றும் 25 தேர்ச்சி திறனற்ற பணியாளர் பிறப்பு/இறப்பு பதிவு பணியிடம் அத்தியாவசிய தேவையாக அவசியம் மற்றும் அவசரம் கருதி பிறப்பு, இறப்பு பதிவு, வணிக உரிமம், தினமும் சமர்ப்பிக்க வேண்டிய அலுவலக கோப்புகள் மற்றும் ஒரு Division-க்கு 1 அலுவலக பணியாளர் வீதம் தபால்கள் பெறுதல் அனுப்புதல் போன்ற பணிகளுக்கு சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் சுகாதார அலுவலர்கள் கேட்டு கொண்டதற்கு இணங்க ஆய்வு செய்யப்பட்டதில் தேவைப்படுவதால் இப்பணியாளர்கள் வெளிக்கொணர்வு முறையில் தற்காலிகமாக இணை இயக்குநர்/திட்ட இயக்குநர். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், கோபுரகலசம் நகர அளவிலான கூட்டமைப்பு (CLF) மூலமாக மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் ஊதியம் நிர்ணயம் செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 16.02.2026 முதல் 15.03.2026 வரை, 17.03.2026 முதல் 16.04.2026 வரை மற்றும் 18.04.2026 முதல் 17.05.2026 வரை மாமன்ற பின்னேற்பு ஒப்புதல் பெற்று ஒப்பந்த அடிப்படையில் கோபுர கலச நகர அளவிலான கூட்டமைப்பு (CLF) மூலமாக பணி மேற்கொள்ள பொது சுகாதார அவசர அவசியம் கருதி கால நீட்டிப்பு செய்து வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

மேலும், தற்போது 100 வார்டுகளில் 25 பிரிவுகளில் 25 அலுவலக உதவியாளர்கள் மற்றும் 25 கணினி உதவியாளர்களுக்கு 17.05.2026 அன்று கோபுரகலசம் நகர அளவிலான கூட்டமைப்பிற்கு (CLF) கால நீட்டிப்பு முடிவு பெற்றது. மேற்படி வெளிக்கொணர்வு பணியாளர்களுக்கு ESI, EPF மற்றும் சேவை வரி உட்பட கணினி உதவியாளர் 1-நபருக்கு (ரூ.26,760/- ஒரு மாதத்திற்கு) மற்றும் தேர்ச்சி திறனற்ற பணியாளர் 1 நபருக்கு(ரூ.17,730/- ஒரு மாதத்திற்கு) 19.05.2026 முதல் 01.07.2026 வரை பணி மேற்கொள்ள பொது சுகாதார அவசர அவசியம் கருதி செலவினங்கள் மேற்கொண்டமைக்கு பணி உத்தரவு வழங்க மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1408**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5. MH1/001465/2`024**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட 100 வார்டு பகுதிகளில் டெங்கு உள்ளிட்ட கொசுவினால் பரவக்கூடிய நோய்களை தடுக்க, பொது சுகாதார அவசர அவசியம் கருதி 530 கொசு ஒழிப்பு பணியாளர்களை 09.05.2026 முதல் 09.07.2026 வரை ஒப்பந்த அடிப்படையில் கோபுரக்கலசம் நகர அளவிலான கூட்டமைப்புக்கு ஆணை வழங்கியமைக்கு பின்னேற்பு கோரியும் மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1409**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6. ந.க.எண்.ஓ4/010536/2021**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் செயல்பட்டு வரும் LKG மற்றும் UKG வகுப்புகளுக்கு நிர்வாக நலன் கருதியும், மாணவர்களின் கற்றல் நலன் கருதியும் 2026-2027 கல்வியாண்டில் ஏற்கனவே பணிபுரிந்து வந்த 81 கே.ஜி.ஆசிரியர்கள் மற்றும் 70 உதவியாளர்களை முற்றிலும் தற்காலிகமாக 2026-2027 ஆம் கல்வியாண்டிலும் ஜீன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை 11 மாதங்கள் மட்டும் பணியமர்த்தி கொள்வதற்கும்,

மேற்காணும் விவரப்படி 81 கே.ஜி.ஆசிரியர்களுக்கு ஏற்கனவே மாதாந்திர மதிப்பூதியம் ரூ.10,000/- வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் ஏற்படும் உத்தேச செலவினத் தொகையான (ரூ.10000 x 11 மாதங்கள் x 81 நபர்கள்) ரூ.89,10,000/- (ரூபாய் எண்பத்து ஒன்பதாயிரத்து பத்தாயிரம் மட்டும்) மற்றும் 70 உதவியாளர்களுக்கு ஏற்கனவே மாதாந்திர மதிப்பூதியம் ரூ.5,000/- வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் ஏற்படும் உத்தேச செலவினத் தொகையான (ரூ.5000 x 11 மாதங்கள் x 70 நபர்கள்) ரூ.38,50,000/- (ரூபாய் முப்பத்து எட்டாயிரத்து

ஐம்பதாயிரம் மட்டும்) மொத்தம் ரூ.89,10,000/- + ரூ. 38,50,000/- = ரூ. 1,27,60,000/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஏழு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மாநகராட்சி கல்விநிதியிலிருந்து பெற்று வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1410**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7. <u>ந.க.எண்.ஓ4/015135/2021</u>**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 15 மேல்நிலைப்பள்ளிகளில் நிர்வாக நலன் கருதியும், பள்ளி மாணாக்கர்களின் நலன் கருதியும் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் ஏற்கனவே பணியமர்த்தப்பட்ட 79 முதுகலை பட்டதாரி ஆசிரியர்களை 2026-2027ஆம் கல்வியாண்டில் ஜீன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை 11 மாதங்கள் பணியமர்த்தி கொள்வதற்கும்,

மேற்காணும் விவரப்படி 79 நபர்களுக்கு ஏற்கனவே மாதாந்திர மதிப்பூதியம் ரூ.15,000/- வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் ஏற்படும் உத்தேச செலவினத் தொகையான (ரூ.15000 x 11 மாதங்கள் x 79 நபர்கள்) ரூ.1,30,35,000/- (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து இலட்சத்து முப்பத்து ஐந்தாயிரம் மட்டும்)-யை மாநகராட்சி கல்விநிதியிலிருந்து பெற்று வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1411**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8. <u>ந.க.எண்.ஓ4/017586/2021</u>**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 26 ஆரம்பப்பள்ளிகள், 14 நடுநிலைப்பள்ளிகள், 9 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 15 மேல்நிலைப்பள்ளிகள், விரிவாக்க செய்யப்பட்ட பகுதியில் 33 ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் சுகாதார நலன் மற்றும் பணிபுரிந்து வரும் ஆசிரியர்களின் சுகாதார நலன் பேணும் பொருட்டு பள்ளியின் நிர்வாக நலன் கருதி முற்றிலும் தற்காலிக அடிப்படையில் ஏற்கனவே பணியமர்த்தப்பட்ட 123 தூய்மை பணியாளர்களை 2026-2027ஆம் கல்வியாண்டில் ஜீன் 2026 முதல் ஏப்ரல் 2027 வரை 11 மாதங்கள் பணியமர்த்தி கொள்வதற்கும்,

மேற்காணும் விவரப்படி 123 நபர்களுக்கு ஏற்கனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை எண்.21787/2021/EA2 நாள் 28.10.2021ல் நிர்ணயம் செய்துள்ளவாறு தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.391/- வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் ஏற்படும் உத்தேச

செலவினத் தொகையான (ரூ.391 x 334 நாட்கள் x 123 நபர்கள்) ரூ.1,60,63,062/-(ரூபாய் ஒரு கோடியே அறுபது இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து அறுபத்து இரண்டு மட்டும்)-யை மாநகராட்சி ஆரம்ப கல்விநிதியிலிருந்து பெற்று வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1412**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9. <u>ந.க.எண்.ஓ4/010839/2024</u>**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 9 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 15 மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் விளையாட்டு திறனை ஊக்குவிக்கும் பொருட்டும், ஒழுக்க நெறிமுறைகளை கற்பிக்கும் பொருட்டும், பாதுகாப்பு நலன் கருதியும், நிரந்தர உடற்கல்வி ஆசிரியர்கள் பற்றாகுறையாக இருப்பதாலும், மாணவ, மாணவியர்களின் நலன் கருதியும், நிர்வாக நலன் கருதியும், முற்றிலும் தற்காலிக அடிப்படையில் ஏற்கனவே பணியமர்த்தப்பட்ட 10 உடற்கல்வி ஆசிரியர்களை 2026-2027ஆம் கல்வியாண்டில் ஜீன் 206 முதல் ஏப்ரல் 2027 வரை 11 மாதங்கள் பணியமர்த்தி கொள்வதற்கும்,

மேற்காணும் விவரப்படி 10 நபர்களுக்கு ஏற்கனவே மாதாந்திர மதிப்பூதியம் ரூ.12,000/- வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் ஏற்படும் உத்தேச செலவினத் தொகையான (ரூ.12000 x 11 மாதங்கள் x 10 நபர்கள்) ரூ.13,20,000/- (ரூபாய் பதிமூன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்)-யை மாநகராட்சி கல்விநிதியிலிருந்து பெற்று வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1413**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10. <u>ந.க.எண்.ஓ4/000487/2025</u>**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் ஆரம்பப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளின் பாதுகாப்பு நலன் கருதி 36 இரவுக்காவலர்களை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின்கீழ் இயங்கும் பகுதியளவிலான கூட்டமைப்புகளில் திருவேங்கடம் பகுதியளவிலான கூட்டமைப்பு மூலமாக வெளிக்கொணர்வு முறையில் 16.12.2025 முதல் 30.01.2026 வரை 45 நாட்கள் பணியமர்த்தி கொண்டமைக்கும், அதனைத் தொடர்ந்து, 31.01.2026 முதல் 31.03.2026 வரை இரண்டு மாதங்கள் பணியமர்த்தி கொண்டமைக்கும், 01.04.2026 முதல் 30.04.2026 வரை ஒரு மாதத்திற்கு பணியமர்த்தி கொண்டமைக்கும், பின்னேற்பும்,

அதனைத் தொடர்ந்து, 2026-2027ஆம் கல்வியாண்டில் பள்ளியின் பாதுகாப்பு நலன் கருதி 36 இரவுக்காவலர்களை திருவேங்கடம் பகுதியளவிலான கூட்டமைப்பு மூலமாக வெளிக்கொணர்வு முறையில் 01.06.2026 முதல் 31.08.2026 (மூன்று மாதங்கள்) பணியமர்த்துவதற்கும்,

அதனைத் தொடர்ந்து, ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.516/- மற்றும் சேவைக்கட்டணம் 2% என்ற அடிப்படையில் (ESI – 3.25% & EPF – 13%) ஊதியம் வழங்குவதற்கும், மேற்காணும் செலவினத்தினை மாநகராட்சி ஆரம்ப கல்விநிதியிலிருந்து பெற்று வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1414**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11. <u>ந.க.எண். ஓ9/008699/2025</u>**

அரசாணை நிலை எண்.71 சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை நாள் 27.06.2025ன்படி நான்காம் கட்டமாக மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 16416 மாணவ, மாணவியர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 26.08.2025ந் தேதி முதல் விரிவுப்படுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்காணும், அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 16416 உணவு பரிமாறும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 69 தன்னார்வ பணியாளர்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2022/எம்1 நாள் 10.10.2025ன்படி கடந்த அக்டோபர் 2025 முதல் 30.04.2026 வரை ஒரு நபருக்கு ரூ.1500/- வீதம் மதிப்பூதியம் வழங்கப்பட்டு வந்தது.

தற்போது, 2026-2027ஆம் கல்வியாண்டிலும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 16416 முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் உணவு பரிமாறும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 69 தன்னார்வ பணியாளர்களுக்கு ஒரு நபருக்கு ரூ.1500/- வீதம் மதிப்பூதியம் **01.06.2026 முதல் தொடர்ந்து வழங்கிடவும், மேற்படி செலவினத்தினை மாநகராட்சி ஆரம்ப கல்விநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும்** மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1415**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**12. <u>E8 /Est. No. 487 /25 - 26</u>**

மதுரை மாநகராட்சி, மண்டலம்-2ல் வார்டு எண், 15ல் உள்ள விசாலாட்சிபுரம் சமுதாயகூடம் கூடுதல் பணி செய்யும் பணிக்கு ரூ.9.90/-லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து

பொது நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 11.02.2026 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 13.03.2026 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன.

1. திரு. T. சரவணன் : மதிப்பீடு விலையை விட -2.55% குறைவு
2. M/s. பவித்ரா பில்டர்ஸ் : மதிப்பீடு விலையை விட 4.42% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் திரு. T. சரவணன் என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்திலிருந்து **-2.55%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலை விகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1416**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 13. E8 /Est. No. 505 / 25-26

மதுரை மாநகராட்சி மண்டலம் -4 வார்டு எண்.45ல் பழைய கிழக்கு மண்டல அலுவலகம் மராமத்து செய்து கிச்சன் செண்டர் அமைக்கும் பணிக்கு ரூ.10.30/-லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொது நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 27.02.2026 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 11.05.2026 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளி வரப்பெற்றன.

1. திருமதி. B. பவானி : மதிப்பீடு விலையை விட -1.01% குறைவு
2. திரு. M. மகேஷ் கண்ணன் : மதிப்பீடு விலையை விட 4.53% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் திருமதி. B. பவானி என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்திலிருந்து **-1.01%** குறைவாக விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலை விகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1417**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 14. E7/Est.No.502/25-26

மதுரை மாநகராட்சி, முல்லை பெரியார் குடிநீர் திட்டம் Air-Valve மாற்றி அமைக்கும் பணிக்கு ரூ.7.67/-லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 27.02.2026 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி

ஒதுக்கீடு பெறப்பட்டு 11.05.2026 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன.

1. M/s. EDR கன்ஸ்ட்ரக்சன் : மதிப்பீடு விலையை விட -0.20% குறைவு
2. திரு. M. அருள்ராஜ் : மதிப்பீடு விலையை விட 4.39% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் M/s. EDR கன்ஸ்ட்ரக்சன், என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்திலிருந்து **-0.20%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலை விகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1418**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 15. MSCL/15843/20

மதுரை மாநகராட்சி மைய பொறியியல் பிரிவில் திட்டம் மற்றும் பொது நிதி தொடர்பான தணிக்கை பணிகள், வழக்குகள் மற்றும் மையபொறியியல் பிரிவுகளுக்கான தணிக்கைத் தடைகளுக்கு பதிலுரை தயார் செய்யும் பணிகள் மேற்கொள்ள திரு.K.கருப்பையா, உதவி ஆணையாளர் (கணக்குகள்)(ஓய்வு) அவர்களுக்கு 22/06/2026 முதல் 21/06/2027 வரை ஒரு வருடத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.45,000/- என்ற ஊதியத்தின் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்து ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி ஒப்புதல் வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1419**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 16. E3/017251/21

மதுரை மாநகராட்சியில் முன்னாள் இராணுவத்தினர் கழகத்தை சார்ந்த TEXCO பணியாளர்கள் எட்டு நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களின் ஒப்பந்த பணிக்காலம் 01.04.2026 முதல் 30.06.2026 வரை ஆணையாளர் அவர்களால் ஒப்புதல் பெறப்பட்டு 02.06.2026 அன்று மாமன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்நேர்வில் தற்போது பணிபுரிந்து வரும் எட்டு TEXCO பணியாளர்களை சப்ளை உத்தரவு காலத்தினை 01.07.2026 முதல் 30.09.2026 வரை மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1420**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 17. E7/004275/24

மதுரை மாநகராட்சி மைய அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்கள் (1 முதல் 5 முடிய) மற்றும் வாகன பராமரிப்பு நிலையங்கள் ஆகியவற்றிக்கு கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்த அடிப்படையில் கோபுர கலசம் நகர அளவிலான கூட்டமைப்பு (City Level Federation - CLF) நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (City Lively Centre - CLC) மற்றும் நன்மை பெண்கள் பெடரேசன் (ALF) மூலம் சப்ளை செய்யப்பட்டு வருகின்றனர். இவர்களின் ஒப்பந்த பணிக்காலம் 26.03.2026 முதல் 24.06.2026 வரை காலநீட்டிப்பு பெறப்பட்டு 02.06.2026 அன்று மாமன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

| வ. எண் | மையம் மற்றும் மண்டல அலுவலகங்கள் | ஒப்பந்த பணியிடம் | ஒப்பந்த நிறுவனம் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | CLC | CLF | ALF | மொத்தம் |
| 1 | மையம் | தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் | 9 | - | - | 9 |
| 2 | மண்டலம்-1 | | 86 | 10 | 10 | 106 |
| 3 | மண்டலம்-2 | | 98 | 12 | 15 | 125 |
| 4 | மண்டலம்-3 | | 73 | 9 | 15 | 97 |
| 5 | மண்டலம்-4 | | 8 | 71 | 10 | 89 |
| 6 | மண்டலம்-5 | | 45 | 50 | 10 | 105 |
| 7 | லாரி ஸ்டாண்ட் | | 27 | - | - | 27 |
| | | மொத்தம் | **346** | **152** | **60** | **558** |
| 8 | மண்டலம்-1 | தொழில்நுட்ப உதவியாளர்கள் | 9 | | 1 | 10 |
| 9 | மண்டலம்-2 | | 12 | | 1 | 13 |
| 10 | மண்டலம்-3 | | 9 | | 1 | 10 |
| 11 | மண்டலம்-4 | | 10 | | 1 | 11 |
| 12 | மண்டலம்-5 | | 9 | | 2 | 11 |
| 13 | மையம் | | 5 | | 1 | 6 |
| | | மொத்தம் | **54** | | **7** | **61** |
| 14 | மையம் மற்றும் மண்டலம்-1 முதல் 5 வரை | கணினி பணியாளர்கள் | **75** | | | **75** |
| | | **ஆக மொத்தம்** | | | | **694** |

அதன்பேரில் தற்பொழுது இவர்களின் ஒப்பந்த காலம் 24.06.2026 முடிவடைய உள்ளதால் பணியின் அவசர அவசியத்தினை கருதி கோபுர கலசம் நகர அளவிலான கூட்டமைப்பு (City Level Federation - CLF), நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (City Lively Centre - CLC) , நன்மை பெண்கள் பெடரேசன் (ALF) வெளிக்கொணர்வு மூலம் சப்ளை

செய்யப்படும் நபர்களின் ஒப்பந்த காலத்தினை 25.06.2026 முதல் 24.09.2026 வரை மூன்று மாத காலத்திற்கு மேற்கண்ட நிறுவனங்களுக்கு காலநீட்டிப்பு செய்து வழங்குவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1421**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 18. E7 /Est. No.002869/ 26

மதுரை மாநகராட்சி மண்டலம் -3 வார்டு எண்.76ல் உள்ள பெரியார் பேருந்து நிலையம் Platform 1, 2, 3 & 4 வெளிப்புற பகுதிகளில் கூடுதல் மின்விளக்கு வசதி செய்யும் பணிக்கு ரூ.11.25/-லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொது நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 04.03.2026 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 11.05.2026 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றன.

1. M/s. விஜய் டிரேடர்ஸ் : மதிப்பீடு விலையை விட -0.04% குறைவு

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளியில் M/s. விஜய் டிரேடர்ஸ் என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்திலிருந்து **-0.04%** குறைவாக விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலை விகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1422**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 19. E7/Est. No.490/25-26

மதுரை மாநகராட்சி, மண்டலம்-3ல் வார்டு எண்.58&62ல் உள்ள AA மெயின் ரோடு மற்றும் SS காலனி வடக்கு வாசல் பகுதியில் குடிநீர் குழாய் பழுதான 500 mm A.C & 400mm A.C & 700 PSC பைப்லைன் (refixing) மாற்றி 610 x 6.3mm M.S. Pipe & 300mm D.I.K-9 பைப் அமைக்கும் பணிக்கு ரூ.5.85/-லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 13.02.2026 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 13.03.2026 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன.

1. M/s. EDR கன்ஸ்ட்ரக்சன் : மதிப்பீடு விலையை விட -0.10% குறைவு
2. திரு. M. அருள்ராஜ் : மதிப்பீடு விலையை விட 5.49% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் M/s. EDR கன்ஸ்ட்ரக்சன், என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்திலிருந்து **-0.10%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலை விகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1423**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**20. <u>E8 /Est. No. 489 / 25-26</u>**

மதுரை மாநகராட்சி, மண்டலம்-3ல் வார்டு எண்.75ல் உள்ள சுப்பிரமணியபுரம் எம்.கே. புரம் காஜா தெரு தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அடுக்கு மாடி குடியிருப்பில் 1லட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர் Sump அமைக்கும் பணிக்கு ரூ.27.70/-லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 17.02.2026 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 25.02.2026 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று டெண்டர்கள் வரப்பெற்றன.

1. M/s. சூப்பர் எலட்ரிக்கல்ஸ் : மதிப்பீடு விலையை விட -0.01% குறைவு
2. M/s. ஸ்ரீ ஹரி இன்ஜினியரிங் : மதிப்பீடு விலையை விட -0.81% குறைவு
3. M/s. Sri SRB கன்ஸ்ட்ரக்சன் : மதிப்பீடு விலையை விட -0.81% குறைவு

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று டெண்டர்களில் M/s. சூப்பர் எலட்ரிக்கல்ஸ், என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்திலிருந்து **-0.01%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலை விகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1424**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**21. <u>E7 /Est. No. 504 / 25-26</u>**

மதுரை மாநகராட்சி மண்டலம் -2 வார்டு எண்.52 பகுதியில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு பல்வேறு இடங்களில் சாலை சீரமைப்பு மற்றும் பாதாள சாக்கடை தொட்டிகள் உயர்த்தி கட்டும் பணிக்கு ரூ.9.99/-லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொது நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 27.02.2026 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 11.05.2026 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளி வரப்பெற்றன.

1. M/s. Sri SRB கன்ஸ்ட்ரக்சன் : மதிப்பீடு விலையை விட -0.01% குறைவு

2. M/s. சூப்பர் எலட்ரிக்கல்ஸ் : மதிப்பீடு விலையை விட 5.74% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் M/s.Sri SRB கன்ஸ்ட்ரக்சன் என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்திலிருந்து **-0.01%** குறைவாக விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலை விகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1425**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 22. E7/002870/25

மதுரை மாநகராட்சி மண்டலம் -2 வார்டு எண்.31ல் உள்ள தமுக்கம் பண்ணாட்டு மையம் 250KVA (2Nos.) & 500KVA ஜெனரேட்டர் வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு ரூ.6.10/-லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொது நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 04.03.2026 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 11.05.2026 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளி வரப்பெற்றன.

1. திரு. S.வேம்படையான் : மதிப்பீடு விலையை விட -0.79% குறைவு
2. M/s. கதிர்வேல் & Company : மதிப்பீடு விலையை விட -0.10% குறைவு
3. M/s. PR கன்ஸ்ட்ரக்சன் and Co. : மதிப்பீடு விலையை விட 2.56% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திரு.S.வேம்படையான் என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்திலிருந்து **-0.79%** குறைவாக விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலை விகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1426**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 23. E7 /Est. No. 431 / 25-26

மதுரை மாநகராட்சி மண்டலம் -1 வார்டு எண்.3ல் உள்ள ஆனையூர் மந்தை பகுதியில் முன்புறம் உள்ள சேதமடைந்த பேவர் பிளாக்குகளை அகற்றி மீண்டும் பேவர் பிளாக் அமைக்கும் பணிக்கு ரூ.9.90/-லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொது நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 12.01.2026 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி

ஒதுக்கீடு பெறப்பட்டு 25.02.2026 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளி வரப்பெற்றன.

1. M/s. ஹெட்வே கன்ஸ்ட்ரக்சன் : மதிப்பீடு விலையை விட -0.10% குறைவு
2. M/s. பாலாஜி கன்ஸ்ட்ரக்சன் : மதிப்பீடு விலையை விட 4.49% அதிகம்
3. திரு. P. கருப்பையா : மதிப்பீடு விலையை விட 755.72% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் M/s.ஹெட்வே கன்ஸ்ட்ரக்சன் என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்திலிருந்து **-0.10%** குறைவாக விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலை விகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1427**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 24. E8/Est.No.488/25-26

மதுரை மாநகராட்சி, மண்டலம்-5 வார்டு எண்-100ல் உள்ள அவனியாபுரம் பைபாஸ் சாலையில் உள்ள ஆரம்ப சுகாதார மையத்தில் (UPHC) அவசர ஊர்தி நிறுத்துவதற்கு செட்(shed) மற்றும் தடுப்பு வேலி அமைக்கும் பணிக்கு ரூ.5.60/-லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொது நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 11.02.2026 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 11.05.2026 அன்று டெண்டர் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு டெண்டர்கள் வரப்பெற்றன.

1. திரு. S. சஞ்சய் காந்தி : மதிப்பீடு விலையை விட -0.51% குறைவு
2. திரு. S. சுப்பையா : மதிப்பீடு விலையை விட 5.06% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு டெண்டர்களில் திரு. S. சஞ்சய் காந்தி என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்திலிருந்து **-0.51%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலை விகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1428**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 25. E8 /Est. No. 501 / 25-26

மதுரை மாநகராட்சி மண்டலம் -2 வார்டு எண்.66ல் பகுதிக்குட்பட்ட வைகை குடிநீர் மெயின் பைப்லைன் குடிநீர் கசிவு சரிசெய்யும் பணிக்கு ரூ.9.20/-லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 27.02.2026

அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 11.05.2026 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளி வரப்பெற்றன.

1. திருமதி. P. அன்னலெட்சுமி : மதிப்பீடு விலையை விட -0.75% குறைவு
2. திரு. T. சரவணன் : மதிப்பீடு விலையை விட -0.65% குறைவு
3. M/s. கிளாசிக் இன்ஞினியரிங் : மதிப்பீடு விலையை விட 3.92% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திருமதி. P. அன்னலெட்சுமி என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்திலிருந்து **-0.75%** குறைவாக விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலை விகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1429**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**26. <u>E1 /005439 /25-26</u>**

மதுரை மாநகராட்சியில் முல்லை பெரியார் கூட்டுக்குடிநீர் திட்டத்தில் உள்ள 125MLD குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் SCADA பணிகள் மேற்கொள்ள (O&M) ஒப்பந்தத்தின்படி பத்து (10) வருடகாலத்திற்கு இயக்கி பராமரிப்பு செய்யும் பணிக்கு ரூ.13,82,19,827/-க்கு M/s. P&C Projects (P) Ltd., என்ற நிறுவனத்திற்கு பணியினை மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 07.05.2025 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் இப்பணிக்கான இரண்டாம் தவணையாக ரூ.103,88,636/-க்கு குடிநீர் வடிகால் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1430**

**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**27. <u>E2/Est.No. 495/25-26</u>**

மதுரை மாநகராட்சி மண்டலம் -1 வார்டு எண்.5ல் உள்ள நாகானாகுளம் முனியாண்டிபுரம் AD காலனி தெற்கு பக்கம் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருவில் சிமெண்ட் கான்கீரிட் சாலை அமைக்கும் பணிக்கு ரூ.7.42/-லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொது நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 18.02.2026 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 13.03.2026 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளி வரப்பெற்றன.

1. திருமதி. B.பவானி : மதிப்பீடு விலையை விட -0.34% குறைவு

2. திரு. N.பிச்சைமணி : மதிப்பீடு விலையை விட 2.25% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் திருமதி. B. பவானி என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்திலிருந்து **-0.34%** குறைவாக விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். இவ்விலை விகிதத்தை ஏற்று ஆணையாளர் அவர்களிடம் ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1431**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**28. <u>E8/Est.No.454/25-26</u>**

மதுரை மாநகராட்சி மண்டலம் 5 வார்டு எண்.93ல் உள்ள முனியாண்டிபுரம் மயானத்திற்கு புதிய 2 RCC மேற்கூரை தகனமேடை மற்றும் பேவர் பிளாக் அமைக்கும் பணிக்கு ரூ.9.90/-லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து பொது நிதியின் கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களால் 03022026 அன்று நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு 12.05.2026 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளி வரப்பெற்றன.

1. M/s.பவித்ரா பில்டர்ஸ் மதிப்பீடு விலையை விட -2.55% குறைவு.

2. திரு.T.சரவணன் மதிப்பீடு விலையை விட 1.94% அதிகம்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் M.s. பவித்ரா பில்டர்ஸ் என்ற ஒப்பந்த நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்திலிருந்து -2.55% குறைவாக இவ்விலை விகிதத்தை ஏற்று ஆணையாளர் விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ளார். அவர்களிடம் ஒப்புதல் பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண்: 1432**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒப்பம்) தி. நாகராஜன்**

**நாள்: 14.07.2026** **மேயர் (பொ) மற்றும் துணை மேயர்**

**இடம்: மதுரை** **மதுரை மாநகராட்சி**

# மதுரை மாநகராட்சி

